**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | அசல் வழக்கு எண்.184/2019 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா.1.திரு.அழகர் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Husband's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 13th day of December 2023

13.12.2023
O.S.No.184/2019

வா.சா.1.திரு.அழகர்  த.பெ.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 29.01.1997 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது **வா.சா.ஆ-1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 11.09.1997 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் நகல் அது **வா.சா.ஆ-2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி ஆவணம் நகல் என்பதால் எதிர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** 07.09.2019 தேதியிட்டவில்லங்க சான்றிதழ் அது **வா.சா.ஆ-3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வாதி கடந்த 17.09.2019 தேதியில் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கையிருப்பு நகல் அது **வா.சா.ஆ-4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான லே அவுட் நகல் அது **வா.சா.ஆ-5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி ஆவணம் நகல் என்பதால் எதிர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**